பதிவு எண். M 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: கார்த்திகை 21 (7—12—71) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 22 (8—12—71) புதன் [இதழ்: 146

நச்சுவாயுக் குண்டை பாகிஸ்தான் வீசியது

காஷ்மீர் மாநிலம் ஜம்மு பகுதியில் நேற்று பிற்பகல் பாகிஸ்தான் போர் விமானம் ஒன்று நுழைந்தது; எல்லைப் பகுதியில் உள்ள கிராமங்களின்மீது அந்த விமானம் தாழ்வாகப் பறந்தது.

'தபோத்' என்ற கிராமத்தின் மீது பாகிஸ்தான் விமானம் நச்சு வாயுக் குண்டு (நாப் பாம்பு) ஒன்றை வீசியது.

போர் தொடங்கியதிலிருந்து இப்போதுதான் பாகிஸ்தான் முதன் முதலாக நச்சு வாயுக் குண்டை வீசியிருக்கிறது.

எதிரியின் இராணுவப் பாசறையில் இந்தியப் படை நுழைந்தது

ஜெஸ்சூர் விமானத்தளம் வீழ்ந்தது-- கோமில்லா நகர் துண்டிக்கப்பட்டது

மே.பாகிஸ்தானில் 7 நகரங்களைக் கைப்பற்றினர்

புதுடில்லி, டிச. 7--

வங்க தேசத்தில் உள்ள பாகிஸ்தான் அரசின் முக்கிய இராணுவப் பாசறையான ஜெஸ்சூரில் இந்தியப் படை நுழைந்துவிட்டது.

ஜெஸ்சூர் நகரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஜெஸ்சூர் விமான தளத்தை, இந்தியப் படையினர் பிடித்துவிட்டார்கள்.

ஜெஸ்சூர் நகரப் பகுதியில் உள்ள மக்களெல்லாம் பாதுகாப்பான இடங்கட்கு அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

கோமில்லா நகர் வெளித் தொடர்பற்றுத் துண்டிக்கப்பட்டு அங்கே நமது படையினர் முற்றுகையிட்டுள்ளனர்.

மேற்குப் பாகிஸ்தானில் சிந்துப் பகுதியில் நமது படையினர் இன்று 7 நகரங்களைக் கைப்பற்றியுள்ளனர்

வடக்குப் பகுதியில், 80 கிலோமீட்டர் இந்தியப் படை ஊடுருவியுள்ளது பிரம்மபுத்திரா நதியின் வட கரையை அடைந்துவிட்டன; ஜமால்பூர் நகரில் முற்றுகை தொடருகிறது.

பொதுவில் இரண்டு முனைகளிலும் நமது படை விரைந்து முன்னேறி வருகிறது.

விமான நடவடிக்கைகளுக்கான ஆயுதங்கள் -- வெடி மருந்துகள் முதலியவற்றை ஏற்றிச் சென்ற எதிரியின் சரக்கு இரயில் வண்டி அழிக்கப்பட்டது.

எதிரியின் 3 டாங்கிகள் அழிக்கப்பட்டன -- 3 டாங்கிகள் சேதப்படுத்தப்பட்டன.

24 மணி நேரத்தில் 110 பேர் எதிர்த்தரப்பில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஜெகஜீவன்ராம் அறிக்கை

இன்று பிற்பகல் 2-மணிக்கு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் ஓர் அறிக்கை அளிக்கவிருக்கிறார்.

வங்க தேச அகதிகள் திரும்புகின்றனர்

கல்கத்தா, டிச. 7—

மேற்குப் பாகிஸ்தான் வசமிருந்த பல பகுதிகளை இந்தியத் துருப்புகள்விடுவித்ததைத்தொடர்ந்து வங்காள தேச அகதிகள் சிறு சிறு குழுக்களாகத் தங்களுடைய தாயகத்திற்குத் திரும்பத் தொடங்கிவிட்டனர்.

அகதி எவரையும் வேறு எந்த மாநிலத்துக்கும் அனுப்ப வேண்டாம் என்று இந்திய அரசாங்கம் மாநில அரசுக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே 2,58,000 அகதிகள் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தியத் தூதுவரக ஊழியர்கள்

பாகிஸ்தானில் அவதி

புதுடில்லி, டிச. 7—

பாகிஸ்தான் தலைநகரிலுள்ள இந்தியத் தூதுவரக அலுவலக ஊழியர்கள் மூன்று தனி இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்; அவர்களுக்குப் பாகிஸ்தான் கட்டுப்பாடு விதித்துள்ளது.

அவர்கள் தொலைபேசியில் எவருடனும் தொடர்பு கொள்ள முடியாது; அவர்கள் முகவரிக்கு எவ்விதத் தந்திகளும் அனுமதிக்கப்படவில்லை.

இரு இனக் கொள்கை தகர்ந்தது

புதுடில்லி, டிச. 7--

"தனிப் பாகிஸ்தான் வேண்டுமென்று லாகூரில் முஸ்லிம் மாநாடு தீர்மானம் நிறைவேற்றுகையில், மாநாட்டில் நான் இருந்தேன்; இப்போது வங்காள தேச அங்கீகாரம் அளிக்கப்படுகையிலும் இங்கிருக்கிறேன்; இரு இனக் கொள்கை தகர்ந்தது பற்றி மெத்த மகிழ்ச்சி தருகிறது"

என்று வீட்டு வசதித் துறைத் துணையமைச்சர் குஜ்ரால் இன்று நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

புது மேயர் இல்லம்

சென்னை, டிச. 7—

சென்னை மேயர் திருமதி காமாட்சி செயராமன், நேற்று மாலை அண்ணா நகரில் உள்ள புதிய வீட்டில் குடிபுகுந்தார்.

சென்னை மாநகராட்சி மேயருக்குத் தனியாக வீடு கட்டிக் கொடுக்கத் தமிழக அரசு முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து தற்காலிகமாக அண்ணா நகரில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது; அந்த வீட்டில் மேயர் நேற்று குடிபுகுந்தார்.

இதுவும் எதிர்பார்த்ததே!

இந்தியாவுக்கு அளிக்கப்படும் உதவியில் வெட்டு

வாஷிங்டன், டிச. 7—

இந்தியாவுக்கு அளிக்கப்படவிருந்த 87.60 மில்லியன் டாலர் (ரூ. 65.70 கோடி) கடனுதவியை அமெரிக்கா நிறுத்தி (சஸ்பெண்டு) வைத்தது.

அரசாங்கத் துறைச் செயலாளர் வில்லியம் ரோஜர்ஸ், இந்தியத் தூதர் எல். கே. ஜாவை அழைத்து அமெரிக்க அரசின் இந்த முடிவை அறிவித்தார்.

ஜப்பானின் நிலை என்ன?

ஜப்பானும் இந்தியாவுக்கு அளிப்பதாக இருந்த பொருளாதார உதவியை நிறுத்தியிருப்பதாக ஜப்பானிய நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெல்ஜியத்தின் முடிவு

இந்தியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை பெல்ஜியம் நிறுத்தியது.

ஒன்றரை மாதங்களுக்கு முன்பே பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை பெல்ஜியம் நிறுத்திவிட்டது.

நெருக்கடி நிலையுணர்ந்து வேலைக்குத் திரும்புக!

சிம்சன் தொழிலாளர்கட்கு முதல்வர் கலைஞர் வேண்டுகோள்

'பிரச்சினையைப் பிறகு பேசித் தீர்த்துக் கொள்ளலாம்' என வலியுறுத்தல்

சென்னை, டிச. 7

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை உணர்ந்து வேலைக்குத் திரும்புமாறு சிம்சன தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று சட்டப்பேரவையில், சிம்சன் தொழிலாளர் பிரச்சினை குறித்து விவாதிக்க கோரிக்கை கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு பதிலளித்துப் பேசுகையிலேயே முதல்வர் இவ் வேண்டுகோளைவிடுத்தார்.

அவர் மேலும் இத்தொடர்பில் கூறியதாவது:—

"பிரச்சினைகளைப் பின்னர் பேசி முடிவு செய்துகொள்ளலாம்; நாட்டு நெருக்கடி நிலையை உணர்ந்து அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

"இந்த ஆண்டு சிம்சன் தொழிலாளர்கள் பெறவேண்டிய அளவுக்கு அதிகமாகவே போனஸ் பெற்றிருக்கிறார்கள்; ஒப்பந்தத்தில் ஒன்றும் தவறு இல்லை.

"தொழிற்சங்கத்தில் வெளியார்

(1-ம் பத்தி பார்க்க)

(8-ம் பத்தித் தொடர்ச்சி)

தலைவர்களாக இருப்பதைத் தவிர்க்க அரசியல் கட்சிகளையெல்லாம் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வந்து -- மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று -- அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்துவிடலாம்."

அமைச்சர் என். வி. நடராசன்

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது தொழிலாளர் அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிம்சன் தொழிலாளர்கள் இவ்வாண்டு 10 சதவிகிதம் அதிக போனஸ் பெற்றிருக்கின்றனர்; தொழிற்சங்கத் தலைவரை நீக்குவதற்குத் தொழிற்சங்கச் சட்டதிட்டங்களின்படியே நடவடிக்கை எடுக்கவேண்டும்; நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தே அதனைச் செய்யமுடியும்; அப்படியின்றி, அரசு தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கூறுவது சரியில்லை."

இறுதியில் ஒத்திவைப்புத் தீர்மானத்துக்குப் பேரவைத் தலைவர் அனுமதி மறுத்தார்.

வங்க தேசத்தை அமெரிக்காவும் அங்கீகரிக்கும் காலம் வரும்

"மக்கள் சீன அரசை முதன்முதல் இந்தியாதான் அங்கீகரித்தது -- அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை; ஆனால் இன்று அதே அமெரிக்கா, மக்கள் சீனத்தை அங்கீகரித்துள்ளது.

"அதுபோலவே இப்போது வங்க தேசத்தை முதன்முதலாக இந்தியா அங்கீகரித்திருக்கிறது; காலம் கடந்தேனும் அமெரிக்கா அங்கீகரிக்கும் நேரம் ஒன்று வரும்.

"அமெரிக்காவில் தேர்தலுக்கு ஓராண்டுக் காலமே இருக்கிறது; மக்கள் மனோநிலைக்கேற்ப அங்கே ஆட்சி மாறக்கூடும்; இன்றைக்கு இருக்கின்ற அரசு நம்முடைய நியாயத்தை உணர மறுத்தாலும் -- இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்காள தேசத்தை அங்கீகரிக்க மறுத்தாலும் நாளை என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.

"முன்பு மக்கள் சீனாவை அங்கீகரிக்காமல் தைவானை அங்கீகரித்தார்கள் -- ஒரு தீவில் வசித்த சியாங் - கே - ஷேக்கை ஆதரித்தார்கள்; 'பாகிஸ்தானைத்தான் நாங்கள் அங்கீகரிப்போம்' என்று இன்று சொல்வதுபோல், அன்று சியாங் - கே - ஷேக்கை ஆதரித்தார்கள்; தைவானை ஆதரித்து -- ஐ. நா. அவையில் உட்காருவதற்கு இடம் ஒதுக்கினார்கள்; ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? சியாங் - கே - ஷேக்கின் தூதுவர் உட்கார்ந்த இடத்தில், மா - சே - துங், சூ - யென் - லாய் அரசாங்கத்தின் தூதுவர் உட்கார்ந்திருப்பதை நாம் காண்கிறோம்; சீனாவை ஒப்பிட்டுப் பேச விரும்பவில்லை -- நிலைமையை ஒப்பிட்டுத்தான் பேச விரும்புகிறோம்.

"அதைப்போல் ஒரு காலத்தில், நிச்சயமாகப் பாகிஸ்தான் சர்வாதிகாரிகளின் பிரதிநிதியை விட்டுவிட்டு, வங்காள தேசத்தின் பிரதிநிதியை ஏற்கின்ற காலம் வரும் -- வங்காள தேசத்தை அங்கீகரிக்கின்ற காலம் வரும்!"

-- முதலமைச்சர் கலைஞர்
(சட்டமன்றத்தில்)

நம்நாடு
இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2002 கார்த்திகை 21 (7-12-71) செவ்வாய்

நாட்டைக் காக்கச் சூளுரை ஏற்போம்

இந்தியாமீது போர் தொடுக்கப் பாகிஸ்தான் முனைந்ததில் வியப்போ -- திகைப்போ கொள்வதற்கு இடமில்லை; போரைத் தவிர்க்க ஏதேனும் வழி கண்டுபிடித்து அதனை யாகியா கான் அறிவித்திருப்பாரேயானால், அதுதான் ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக இருந்திருக்கும்.

போர் மூளுவதைத் தவிர்க்க எத்தனையோ வழிமுறைகளையெல்லாம் இந்தியா கடைபிடித்துப் பெருமுயற்சி செய்து வந்தது; ஆனாலும், போர் வெறியில் மூழ்கித் திளைத்திருக்கும் யாகியா கானை எப்படி அதிலிருந்து மீட்கமுடியும்? எனவேதான், போரையே விரும்பாத இந்தியாமீது, போர் வெறியனால் திணிக்கப்பட்டிருக்கிறது -- போர்!

நெடுநாட்களுக்கு முன்பே போர் தொடுக்கத் திட்டமிட்டு -- அதற்கான ஆயத்தங்களையெல்லாம் செய்துவிட்டு -- பத்து நாட்களுக்கு முன்பே அதனை சூசகமாக உலகுக்கு அறிவித்தும்விட்ட யாகியா கான், முன்வைத்த காலை பின்வைப்பாரா?

போர்ப் பிரகடனத்தை அறிவித்துவிட்டார் -- போர் வெறியர்! தாக்குதலைச் சமாளிக்கக் களத்திலே இறங்கிவிட்டது இந்தியா!

சொந்த நாட்டு மக்கள்மீதே போர் தொடுக்கத் துணிந்த யாகியா கானிடம் நாம் எப்படி அரசியல் விவேகத்தை எதிர்பார்க்க முடியும்?

இந்தியாவும், இந்தியாமீது உண்மையான நட்புறவு கொண்டுள்ள நாடுகளும் அமைதியை நிலைநாட்ட எவ்வளவோ முயன்று பார்த்தன. போர் முறை ஒன்றைத் தவிர வேறு அரசியல் அறநெறியையோ, சனநாயக வழிமுறையையோ அறிந்திராத யாகியா கான், தான் நினைத்ததைச் செய்துமுடிக்கத் துணிந்துவிட்டபின், நாம் எதிர்பார்த்த பலன் எப்படிக் கிட்டும்?

'சீனவின் பின்பலமும், அமெரிக்காவின் அரவணைப்பும் இருக்கும்போது நம்மை யார் என்ன செய்யமுடியும்' என்று கருதி, பாகிஸ்தானின் சர்வாதிகாரி படையெடுப்புக்குத் துணிந்துவிட்டார்!

நம்மீது திணிக்கப்பட்டுவிட்ட இந்தப் போரில், நமக்குத் துணையாக யார் வந்தாலும் வராவிட்டாலும், 'இறுதி வெற்றி நமதே' என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பதிலடியைத் தாங்கத் திராணியின்றித் திக்குமுக்காடுகிறான் எதிரி; களத்திலே நமது முப்படைகளும் இறங்கிவிட்டன -- எதிரியின் விமானங்கள் குருவிகளைப்போல் சுட்டு வீழ்த்தப்படுகின்றன; டாங்கிகள் தவிடுபொடியாக்கப்படுகின்றன; போர்க் கப்பல்கள் நிர்மூலமாக்கப்பட்டுக் கடலில் மூழ்கடிக்கப்படுகின்றன.

நமது தரைப் படை வீரர்கள், மும்முனைத் தாக்குதலைத் துவங்கி எதிரியின் மண்ணிலேயே போரை நடத்துகின்றனர்; மணிக்கு மணி நமது படை முன்னேறுகின்றது என்ற செய்தியைத் தவிர பின்வாங்கியதாக இதுவரை செய்தியில்லை; எதிரிகள் ஆங்காங்கு சரணடைந்து வருகின்றனர்.

'பாகிஸ்தான் அடியோடு சரணடைவதற்கு இன்னும் ஒரு சில நாட்களே போரிட்டால் போதும்' என்ற நிலை தோன்றியுள்ளது; விரைவில் வங்க தேசம் முழுவதும் விடுவிக்கப்பட்டு அங்கு சுதந்தரக் கொடி பறக்கப்போவது உறுதி.

போர்க்களச் செய்திகளை மணிக்கு மணி -- விநாடிக்கு விநாடி தெரிந்துகொள்வதில் நம் நாட்டு மக்கள் காட்டிடும் ஆர்வத்தை அறிந்து மகிழ்கிறோம் -- பாராட்டுகிறோம்; செய்தியை அறிந்து கொள்வதோடு நின்றுவிடாமல், போருக்கு அவரவரும் தம்மாலான ஆதரவை வழங்குவதிலும் ஆர்வம் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

'நாட்டுக்கு ஆபத்து' என்ற செய்தி கேட்டதும், அவரவரும் தங்கள் வீட்டுக்கு வந்த ஆபத்தாக அதனைக் கருதிச் செயல்படக் கூடியவர்கள் தமிழர்கள்' என்பதை, கடந்த கால வரலாறு கூறும்; இந்திய அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நாம் முழு ஆதரவும் -- ஒத்துழைப்பும் நல்கத் தவறோம் என்பதை இந்த நேரத்திலும் நாம் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

சாதி -- சமய -- கட்சி -- கருத்து வேறுபாடுகளையெல்லாம் மறந்து, நாட்டுப் பாதுகாப்பே நமது குறிக்கோள்' என்பதை மனத்தில் கொண்டு, வெற்றி முரசு கொட்டும்வரை நாம் பணியாற்ற வேண்டும்.

சிறையைவிட்டு வெளியில் வந்தவுடன், சீனப் படையெடுப்புச் செய்தியைக் கேள்வியுற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், நமது கழக இலட்சியத்தையும் ஒத்திவைத்துவிட்டு -- நாட்டுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுமாறு நமது கழகத் தோழர்கட்குக் கட்டளையிட்டுவிட்டு -- இந்திய அரசுக்குக் கரம் கொடுத்துக் குரல் எழுப்பிய நிகழ்ச்சி நாட்டு வரலாற்றில் சிறப்பிடம்பெற்ற ஒன்றாகும்.

சீனப் படையெடுப்பின்போது நமது பேரறிஞர் அண்ணா அவர்கள், நாடாளுமன்ற மேலவையில் ஆற்றிய உரை நாட்டுப் பற்றுக்கும் -- ஒருமைப்பாட்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு -- என்று நேற்றைக்கு முன்னாள் நாடாளுமன்றத்தில் கே. சி. பந்த் அவர்கள் கூறியிருப்பது நமக்கு மேலும் பெருமை அளிக்கிறது.

அதே போன்றுதான், நமது கழகத் தலைவரும் -- தமிழக முதல்வருமான கலைஞர் அவர்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் -- வரவேற்புக் கூட்டத்தையே பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனக் கூட்டமாக மாற்றி -- நாடு காக்கும் போராட்டத்துக்கு அன்பழைப்பு விடுத்துள்ளார்; எதிரியை முறியடிக்கச் சூளுரை மேற்கொள்ளும்படி அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நமது கழகத் தலைமைச் செயற்குழு, வருகிற ஞாயிற்றுக்கிழமை சென்னையில் கூடுகிறது; அதுபோது எடுக்கப்படுகின்ற முடிவுகளை ஏற்று நிறைவேற்றிவைப்பதில் நமது கழகத் தோழர்கள் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் கரத்தை வலுப்படுத்த -- அவருக்கு உறுதுணையாகவிருக்கும் தமிழக முதல்வர் கலைஞரின் கரத்தை நாம் வலுவூட்டுவோம் -- அவர் காட்டும் வழி நடப்போம் -- என்று சூளுரை மேற்கொள்வோம்.

எஸ். ஆர். வி. எஸ். தகராறு

ஆளுநர் உத்தரவு

சென்னை, டிச. 7—

எஸ். ஆர். வி. எஸ். நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கும்—நிர்வாகத்தினருக்கும் இடையே உள்ள தகராறைத் தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று அரசு கருதியது.

அதன்பேரில், இந்தத் தகராறைத் தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடும்படி ஆளுநர் கே. கே. ஷா உத்தரவு பிறப்பித்தார்.

இதையொட்டி, இந்த நிறுவனத்தில் கதவடைப்பும் -- வேலை நிறுத்தமும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

காற்றின் தூய்மை கெடுவதைத் தடுக்க நடவடிக்கை

தமிழக அரசு ஆய்வு குழு நியமனம்

சென்னை, டிச. 4—

"காற்றுத் தூய்மை கெடுவது பற்றிய பிரச்சினையை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது; காற்றின் தூய்மை கெடாமலிருக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உருவான யோசனைகளை வழங்குமாறு அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அன்பழகன் அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

சனநாயகத்திற்கே இறுதி வெற்றி

எதிரிகளை முறியடிப்பதற்கு உறுதுணையாக இருப்போம்

தயக்கமின்றி ஒத்துழைப்புத் தருமாறு தமிழக மக்களுக்கு வேண்டுகோள்

சட்டப் பேரவையில் முதலமைச்சர் தீர்மானம்

சென்னை, டிச. 7

இந்தியாமீது பாகிஸ்தான் படையெடுத்திருப்பதைக் கண்டித்துத் தமிழ்நாடு சட்டப் பேரவையில், முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் வாசகம் வருமாறு —

கிழக்கு வங்கத்தின் சனநாயகக் குரலை மதிக்க மறுத்து -- அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்தர வங்காளதேச முழக்கத்தைச் செய்ய முன்வந்தபோது, அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல இலட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியாமீது சுமத்தியதன்மூலம், இந்தியாமீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி இறுதியாக இந்திய மண்ணின்மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலைத் தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெரும் வெற்றி பெறுவதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்குத் தரும் என்கின்ற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீர மறவர்களை வாழ்த்துவதிலும் -- அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை' உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து, சாதி மத பேதங்கள் -- அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிட வேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

"சர்வாதிகாரக் கொள்கை மக்களாட்சித் தத்துவத்தின்மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி, இந்தியா போற்றிவருகின்ற சனநாயகத்திற்கே" என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்கக் காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கியிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது; அவ்வண்ணம் ஆதரவு தர முன்வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும்வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிடப் போருக்குத் தேவையான ஆள் -- பொருள் -- கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியத் தலைமையமைச்சர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று இப்பேரவை கேட்டுக் கொள்கிறது."

'பதுக்கல்காரர்கள் -- ஆக்கிரமிப்பாளர்களைவிட மோசமானவர்கள்'

'சமூக விரோதிகளை அடையாளம் காட்ட வேண்டிய கடமை பொதுமக்களுக்கும் உண்டு'

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, டிச. 7—

"பதுக்கல் வியாபாரங்களைத் தடுக்கவும், பதுக்கல்காரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கத்தின் சார்பில் எல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது; இப்படிப்பட்ட நெருக்கடி நேரத்தில் பதுக்கல்மூலம் பணம் சம்பாதிக்க முயலுகின்றவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்களைவிட மோசமானவர்களாகக் கருதப்படுவார்கள்.

"அவர்களை அதிகாரிகள் அடையாளம் கண்டு கொள்வது ஒருபுறமிருந்தாலும், அந்தச் சமூக விரோதிகளை அடையாளம் காட்டவேண்டிய கடமை பொதுமக்களுக்கும் உண்டு"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினார்.

சென்னை நகரில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை ஒரு நிருபர் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்து கேட்டபோது, 'மண்ணெண்ணெய் வினியோகத்திற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்' என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

செய்தியாளர்:— "நெருக்கடி நிலை -- போர் சூழ்நிலை காரணமாகப் புதிய வரி விதிப்புக்கள் வருமா?"

முதல்வர்:— "'வரும்' என்று முன்பே சூசகமாகத் தெரிவித்திருக்கிறேன்; அதற்கான விளக்கத்தை சட்டமன்றத்தில் அறிவிப்பேன்."

கேள்வி:— "நெருக்கடி நிலையைக் கருதி சட்டமன்றக் கூட்டம் தள்ளிப்போடப்படுமா?"

முதல்வர்:— "அத்தகைய எண்ணம் இல்லை."

கேள்வி:— "போர் நிதிக்கு அமைச்சர்கள் ரூ 500 கொடுப்பார்கள் என்று அறிவித்தீர்களே -- போர் நிதி வசூலிக்கப்படுகிறதா?"

"முதல்வர்:— "அமைச்சர்கள் போர் நிதிக்கு ரூ. 500-ம் உறுப்பினர்கள் குறைந்தது ரூ. 100-ம் தரும்படி கேட்டுக்கொண்டிருந்தேன்.

"முன்பு நடைபெற்ற போர்களின்போது பாதுகாப்பு நிதிக்கு எந்தெந்த முறையில் பணம் வசூலித்தார்கள் -- எப்படிக் கணக்கு வைத்தார்கள் -- எவ்வாறு அனுப்பினார்கள் -- என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதன்படியோ, சிறிது மாற்றங்களுடனோ போர் நிதி திரட்டத் தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும்."

பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க அதிகாரிகள்

அமெரிக்க அரசு திரும்ப அழைக்கிறது

வாஷிங்டன், டிச. 6—

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க அதிகாரிகளில் பெரும்பாலோரையும் -- அவர்களது குடும்பத்தினரையும் அமெரிக்க அரசு அங்கிருந்து திருப்பி அழைத்துக்கொள்ளத் துவங்கியிருக்கிறது.

பாகிஸ்தானில் போர் மூண்டுள்ளதால், இவர்களுக்கு அபாயம் நேரிடக்கூடும் என்று அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது.

மிகவும் முக்கியமான அதிகாரிகள் மட்டுமே பாகிஸ்தானில் தங்கியிருப்பர்.

பாகிஸ்தானுக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி, அமெரிக்க உல்லாசப் பயணிகளையும் -- இதர அமெரிக்க அதிகாரிகளையும் அமெரிக்க அரசு கோரியுள்ளது.

ஆனால், 'இந்தியாவில் உள்ள அமெரிக்க அதிகாரிகளை இது போல வெளியேற்றுவதாக தற்போதைக்கு ஏதும் திட்டமில்லை' என்று ஒரு அமெரிக்க அதிகாரி சொன்னார்.

கலைவாணர் அஞ்சல் தலை

மத்திய அமைச்சர் தகவல்

சென்னை, டிச. 4—

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நினைவு அஞ்சல் தலை வெளியிடுவது குறித்து வந்துள்ள கோரிக்கை, சிறப்பு அஞ்சல் தலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது"

என்று அஞ்சல் துறை அமைச்சர் திரு. பகுகுணா அறிவித்திருக்கிறார்.

தொ. மு. ச. பேரவைத் தோழர்கட்கு

காட்டூர் கோபால் வேண்டுகோள்

சென்னை, டிச. 5—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் திரு. காட்டூர் கோபால் அறிவிப்பதாவது:—

"கடந்த 3-12-71 அன்று இரவு குடியரசுத் தலைவர் அவர்களால் 'அவசர நிலை'ப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது; நாட்டு நெருக்கடி உள்ள நிலையில் தங்குதடையின்றி உற்பத்தியைப் பெருக்கிடவேண்டியது மிக மிக அவசியமாகும் -- உழைப்பாளர்களது ஒத்துழைப்பு இன்றியமையாத தேவையாகும்; கட்சி வேறுபாடு -- தொழிற்சங்க வேறுபாடு காரணமாய் இருக்கின்ற மாச்சரியங்களை மறந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்திடவும் -- நாட்டைப் பாதுகாத்திடவுமான பணிகளில் அனைவரும் ஒன்று திரண்டு நின்றாக வேண்டும்.

எந்த ஓர் உழைப்பாளியின் மனித சக்தியும் விரயமாகாமலும் -- எந்த ஓர் இயந்திரமும் செயலற்ற நிலையில் இல்லாமலும் -- உற்பத்திக் குறைப்பு, வேலைநிறுத்த நிலைகள் இல்லாமலும் கண்காணிப்பாக இருந்தாகவேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

இத்தருணத்தில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களை நடத்தி வருகின்ற நமக்குள்ள பொறுப்பினை எண்ணி ஆங்காங்குள்ள அதன் நிர்வாகிகள் குழுக் கூட்டங்களை நடத்தி -- தற்போது வேலைநிறுத்த நிலை இருப்பின் அதனை உடனே நிறுத்திடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுவதற்கும், வேலைநிறுத்த முயற்சிகள் இருப்பின் அதனைக் கைவிடுவதற்கான முடிவுகளை மேற்கொள்ளவும் வேண்டுகிறேன்.

தொழிலியல் தொடர்பில் அவ்வப்போது எழுகின்ற தொழிற் தகராறு நடவடிக்கைகளை உடனுக்குடன் நேரிடையாகப் பேச்சு வார்த்தை -- மத்தியஸ்த தீர்வுக்கு உடன்படுதல் போன்ற வகைகளில் தீர்வு காணவும் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நிலைமைகளைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தோழர்கள் மற்றும் உள்ள அனைத்துத் தொழிலாளர்களும் நன்கு உணர்ந்துகொண்டு செயல்படத்தக்க பணிகளுக்கு ஆயப்படுத்திட வேண்டுகிறேன்."

1,000 பேருக்கு வேலைவாய்ப்பு

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

செங்கற்பட்டு, டிச. 6—

"கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்குத் தமிழ்நாடு அரசு தீட்டியிருக்கும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,000 பேருக்கு வேலை தரப்பட்டிருக்கிறது.

"இவர்கள், செங்கற்பட்டு மாவட்டத்தின் 10 வட்டங்களில் ஏறத்தாழ 48 வேலைகளை நிறைவேற்றியுள்ளனர்; ரூ. 12.50 இலட்சம் செலவில் மேலும் 262 வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

"இந்தத் திட்டத்தின்கீழ் மேலும் 1,000 பேருக்கு வேலை வாய்ப்புத் தருவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; இந்தத் திட்டங்கள் இறுதிக்குள் இதற்கு அரசு அனுமதி கிடைத்துவிடக்கூடும்"

என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சீத்தாராம தாஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பரணி பாடுவோம்!

[புலவர் இளஞ்செழியன்]:—

தரணி வென்றவர்களுக்குப் பரணி பாடிய தறுகண் பூமி இது!

கூற்றுவன் கோபித்து வரினும் கூட எதிர் நின்று நொறுக்கும் ஆற்றலுக்குச் சொந்தக்காரர்கள், படை வீரர்களாக நடைபோட்ட வெற்றித் திருநாடு இது!

'சோறென்'றால் நாக்கைத் தூக்கிக்கொண்டு ஓடி, 'போரென்'றால் நடையைப் பின்தளர்த்திய சோம்பேறிகளை, 'சோற்றாலடித்த பிண்டங்கள்' என்று தூற்றி ஒதுக்கிய நாடு இது!

'சென்று வா' என்றால், 'வென்று வருவதே' நம் வீரர்களுக்கு வாடிக்கை!

அண்டு தொட்டு இன்றுவரை வீரத்திலே பழுதுபடாத பாரத நாட்டின் எல்லையிலே பாகிஸ்தான், பச்சைப்பிள்ளைத்தனமாகப் போர் தொடுத்திருக்கிறது!

பொறுப்பிருந்தால் பாகிஸ்தான் போர் தொடுத்திருக்காது; பொதுத்தேர்தல் நடத்திப் புதியவர்களை ஆளச்செய்திருக்கவேண்டிய பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற வீரர்களைப் போர் வீரர்களாக்கும் அளவுக்குப் புத்தியை இழந்துவிட்டது!

தன்னுடைய நாட்டு மக்களை ஆள வைக்கவும் தெரியாமல் --- வாழ வைக்கவும் தெரியாமல், தடுமாறித் தடுமாறிப்போன தான்தோன்றி மனிதனாக இருப்பவர் -- நம் அண்டை நாட்டுப் பிறவி யாகியா கான் எனும்போது நமக்கு வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது!

இந்நிலையில், அடித்துத் துரத்தப்பட்ட அவர்களுடைய நாட்டு மக்களை அகதிகளாக ஏற்று -- அவர்களுக்கு முகாம் அமைத்துக் கொடுத்திருக்கும் இந்தியாமீது அதிபர் யாகியா கான் போர் தொடுத்திருப்பது, நமக்குச் சிரிப்பாகவும் இருக்கிறது!

இதைவிட வேடிக்கை -- எங்கோ இருக்கும் நாடுகளெல்லாம் இங்கே இருக்கும் உண்மை நிலைகளைப் புரிந்தும், நமக்கு நன்மை செய்ய நினைப்பவர்களைப்போல நடிப்பதும், நமக்கு அறிவுரை படைப்பதும்தான்!

ஊரை ஆள வந்துவிட்டவர்கள், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் போரை ஏன் விரும்புகிறார்களோ -- அதுதான் நமக்குப் புரியவில்லை!

தங்கள் எல்லைகளுக்குள் அடிவைத்து நடக்கத் தெரியாதவர்கள், பிறர் எல்லைகளுக்குள் அடிவைக்க வருவதுதான் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அதிசயமாகும்!

சனநாயக யுகத்திலும் சர்வாதிகார முகங்கள் நிலைக்க விரும்புகின்றன! மக்கள் காலத்திலும் மமதையாளர்கள் தங்கள் மனக் கோலத்தை மாற்றிக்கொள்ளவில்லை!

தெரிந்தோ தெரியாமலோ சர்வாதிகாரி யாகியா கான் போரைத் தொடங்கிவைத்துவிட்டார்!

'வெற்றிக்கும் -- அவருக்கும் வெகு தூரம்' என்ற வெளிப்படையான உண்மை, அவருக்கும் வெளிச்சமாகத் தெரிந்த ஒன்றுதான்; என்றாலும், அவர் யாரையோ நம்பி மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்.

போரைப் பற்றிய தகவல்கள், பாகிஸ்தான் அதிபர்மீது நமக்கும் பரிதாபத்தையே ஊட்டுகிறது.

மலையோடு எலி மோதுவதுபோல, இந்தியா மீது பாகிஸ்தான் மோதுவது!

அலையோடு துரும்பு போராடுவதுபோல் பாரதத்தோடு பாகிஸ்தான் போராட நினைப்பது!

பாகிஸ்தானைப்போல, பாரதத்துக்கும் போர் நோக்கம் இருக்குமேயானால், விநாடிகளில் பாகிஸ்தான் தவிடுபொடியாகும்.

பாகிஸ்தானை அடிப்பதும் பிடிப்பதும் பாரத வீரர்களுக்கு இமைமூடி இமை திறப்பதற்குள் முடியும்; எனினும், நமது இந்தியத் தலைமையமைச்சர், அதிபர் யாகியா கானின் ஆணவத்தைச் சும்மாவிடப் போவதில்லை!

வங்காள தேச விடுதலைப் படை வீரர்களுக்கு நிலையான — நிம்மதியான அமைதியும், வாழ்வும் கிட்டும் வரையில் பாகிஸ்தான் இராணுவத்தைப் பாரதம் பணியவைத்தே தீரும்!

பாரதம், உலகத்தில் சனநாயகத்தை நிலைக்க வைக்கும் போரைத்தான் இப்போது பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடங்கியிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு இப்போது மேலும் இல்லை — கீழும் இல்லை; அது இப்போது யாவும் இழந்த வெறுங்கழுத்து விதவை நிலையிலே இருக்கிறது.

ஆனால் பாகிஸ்தானிலே வாழுகின்ற மக்கள், சனநாயகத்தை விரும்புகிறார்கள்; முஜிபுர் ரகிமானை அவர்கள் முழுக்கவும் நேசித்திருக்கிறார்கள்; அந்த மக்களின் உணர்ச்சியைப் பாதுகாக்கும் மனநிலையோடுதான் அதிபர் யாகியா கானின் போர் அறைகூவலை, இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் பின்வாங்காமல் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

களத்திலே நம் படை வீரர்கள் சாதித்துக் கொண்டு இருக்கிறார்கள் — வெற்றியைத் தவிர வேறொன்றையும் காணாதவர்கள் நம் வீரர்கள்! உலகம் நம் வீரத்தைப் புரிந்துகொள்ளத்தான் போகிறது -- ஏற்கனவே புரிந்துகொண்டும் இருக்கிறது!

உலகத்திலே இந்தியா சமாதானக் கொடியை உயர்த்துவதற்குக் காரணம், 'சண்டை செய்யத் தெரியாது — முடியாது' என்பதற்காக அல்ல; 'சண்டை கூடாது' என்பதால்தான்!

நம்முடைய சமாதானக் கோட்பாட்டைத் தப்பாகக் கணக்கிட்டுக் கொள்வோர், நமது சமர் -- அதன் சாமர்த்தியம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ளட்டும்!

உண்மையான வீரர்கள்தான் சமாதானத்தையும் பேசமுடியும் என்ற உண்மையை, இந்த உலகமே உணர்ந்து கொள்ளட்டும்! அதற்கு இந்தப் போர்க்களம், ஒரு வாய்ப்பாக அமையட்டும்!

நாட்டைக் காக்க — நம்மைக் காக்க நமக்காகப் போர் நடக்கும் இந்த நேரத்தில், நாம், நம்முடைய படையின் வீரத்திலே நம்பிக்கை வைக்க வேண்டும்.

போர்க் களத்தில் நம் வீரர்கள் இருக்க — போர்க் காலத்தில் நாம் இருக்கிறோம்; நமக்கு இப்போது கடமைகளும் கட்டுப்பாடுகளும் முக்கியம்; நம்முடைய பேச்சும் மூச்சும் இப்போது சரியாக இருக்கவேண்டும்; நம்முடைய குரலில் இப்போது கலக்கமோ — தயக்கமோ — மயக்கமோ எதுவும் இருக்கக்கூடாது; போரைப் பற்றிய விளக்கமும் — முழக்கமும் இப்போது எவர் நாக்கிலும் சரியாக வெளிவர வேண்டும்; அனைத்துமே சரியாக நடந்தால்தான், அகிலமே வியக்கும் சாதனைகளை நம்முடைய போர் வீரர்கள் செய்து காட்ட முடியும்.

வீரத்தின் விளைநிலமே இந்த நாடுதான்; அங்கே வெற்றி என்னும் அறுவடைதான் எப்போதும் காணப்படும்.

இந்தப் போரில் பாரதம், வெற்றிப் பவனியைக் காட்ட இருக்கிறது என்பதை ஒவ்வொரு விநாடியும் நாம் அறிகின்ற செய்திகள் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

சர்வாதிகாரி யாகியா கான் பேராசையில் மண் விழத்தான் போகிறது! அகிலத்தைக் கவர்ந்து நிற்கும் நம் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியின் காலடியிலோ, 'வெற்றி'யெனும் பொன்னே குவியப் போகிறது — இது உறுதி!

இந்த உறுதிக்கு உறுதி சேர்க்கும் வகையில், இந்தியத் தலைமையமைச்சருக்குத் தம் கரம் கொடுக்கக் கலைஞர் கரங்கள் உயருகின்றன!

அமெரிக்கா சென்று திரும்பியதும் நம் ஆற்றல்மிகு கலைஞர், தம் முதல் முழக்கமாகப் பாகிஸ்தான் போர் வெறியை எதிர்த்து முழங்கியிருக்கிறார். கலைஞர் ஈடுபட்ட எந்தக் காரியமும் இதுவரை வரலாற்றிலே தோற்றதில்லை! தமிழக அரசும் — கலைஞரின் போர் முரசும் பாகிஸ்தானை முறியடித்தே தீரும்! இந்தியப் படை வீரர்கள் வென்றே தீருவர்!

பின்வாங்கினர் -- சரணடைந்தனர்!

கல்கத்தா, டிச. 9—

வங்காள தேசத்தில் பல இடங்களில் இந்தியப் படைக்கும்—பாகிஸ்தான் படைகளுக்கும் இடையே கடும் போர் நடந்து வருகிறது; எல்லா இடங்களிலும் பாகிஸ்தான் இராணுவம் பின்வாங்கிவருகிறது.

"போரிடாமல் சரணடைந்துவிட்டால் உங்களை நன்றாக நடத்துகிறோம்; ஆகவே உடனே சரணடையுங்கள்" என்று இந்திய இராணுவத்தினர் ஒலிபெருக்கியின்மூலம் அறிவித்தனர்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மைமன்சிங் மாவட்டத்திலுள்ள பாகிஸ்தான் படை, இந்திய இராணுவத்தினரிடம் சரணடைந்தது; அந்தப் பகுதியில் மட்டும் 160 பாகிஸ்தான் இராணுவத்தினர் சரணடைந்தார்கள்.

மேற்குப் பாகிஸ்தான் பகுதியில் சர்காய் பகுதியில் 50 பாகிஸ்தான் இராணுவத்தினர் சரணடைந்தனர்.

உணவு உற்பத்தி

இந்த ஆண்டில் பெரும் அளவில் இருக்குமாம்

புதுடில்லி, டிச. 3—

"இந்தியாவின் உணவு உற்பத்தி எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டில் அதிகமாக இருக்கும்.

"இந்த ஆண்டு உணவு உற்பத்தி 11,20,00,000 டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; இந்த அளவுக்குக் கிடைக்கவில்லையென்றாலும், கடந்த ஆண்டுகளைவிட அதிக அளவுக்கு இருக்கும்."

தொழிற் சங்கத் தலைவர்கள் --- தி. மு. கழகத்தின் நிலை விளக்கம்

மற்றக் கட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, டிச. 7—

"ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம்; தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தொழிற்சங்கங்களில், அந்தத் தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவரே தலைவராக இருக்கவேண்டும்; வெளியார் யாரும் தலைவராக இருக்கக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும்; இந்தக் கொள்கையைத் தி. மு. கழகம் நெடுநாட்களாக வற்புறுத்தி வருகிறது.

"இந்தக் கொள்கையை மற்றக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொள்வார்களானால் ஒரு வாரத்திலேயே சிம்சன் கம்பெனியின் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டிப் பேசி, பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காண்பதற்குத் தயாராக இருக்கிறேன்"

என்று, முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் சட்டப் பேரவையில் தெளிவுற விளக்கிக் கூறினார்.

சட்டமன்றத்தில் வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி, 'சிம்சன் கம்பெனி வேலை நிறுத்தம் பிரச்சினைக்கு, அரசு ஒரு தீர்வு காண முன்வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு அறிவித்தார்; 'இந்த யோசனைபற்றி இதர கட்சித் தலைவர்கள் கலந்தாலோசித்து முடிவு கூறவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

அவையிலேயே சுதந்தராக் கட்சித் தலைவர் எச். வி. ஹாண்டே, முதல்வரின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்.

"பல சங்கங்களுக்குத் தலைவராக இருக்கின்ற கட்சியினரும் இதற்கு ஒப்புதல் தெரிவிக்கவேண்டும்" என்று முதலமைச்சர் கூறினார்.

உடனே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் தமது ஒப்புதலைத் தெரிவித்தார்.

சிம்சன் தகராறுக்கு இப்பொழுது ஒரு தீர்வு கண்டது போன்ற உணர்வு ஏற்படுவதாகவும், பிற கட்சித் தலைவர்களையும் கூட்டிப் பேசி அவர்களின் கருத்தையும் தெரிந்துகொள்ள விரும்புவதாகவும், இன்னும் ஒரு வாரத்திற்குள் இதனைத் தெரிந்துகொண்ட பிறகு சிம்சன் கம்பெனி தொழிலாளர் தலைவர்களை அழைத்தும் பேசுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

சட்டமன்ற மேலவையிலும் இதே கொள்கையை முதலமைச்சர் தெரிவித்தார்.

சிட்டகாங்கிலிருந்து பிரிட்டிஷார் பயணம்

கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த சிட்டகாங்கிலிருந்து 529 பிரிட்டிஷ்காரர்கள், கப்பல் மூலம் பினாங்குக்குப் புறப்பட்டுவிட்டனர்.

தலைநிமிர்ந்து நிற்கிறது வங்க தேசம்!

இந்தியா அங்கீகரித்ததன் எதிரொலி

இந்தியாவுடனுன தூதுவரக உறவைத் துண்டித்துக்கொண்டது பாகிஸ்தான்

புதுடில்லி, டிச. 7—

நேற்று காலை, இந்தியா வங்கதேசத்துக்கு அங்கீகாரம் அளித்த தன் எதிரொலியாக, இந்தியம் பிரச்சினைக்கு ஒரு தனித் தோற்றம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது,

இதுவரையில், 'பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினை' என்று கூறப்பட்டுவந்த வங்கதேசம், இப்போது உலகின் பெரும் மக்கள் தொகையைக்கொண்ட நாடுகளில் எட்டாவது இடத்திலிருக்கும் ஒரு நாடாக தலை நிமிர்ந்து நிற்கத் துவங்கிவிட்டது.

சீனு, இந்தியா, இரஷ்யா, அமெரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையில் வங்க சேதம் இருக்கிறது.

வங்கதேசத்தை இந்தியா அங்கீகரித்திருப்பதால், அரசியல் துறையில் பெரும் விளைவுகளைத் தோற்றுவிப்பதுடன், இரஷ்யாபோன்ற ஏனைய நட்பு நாடுகள் வங்கதேசத்தை அங்கீகரிக்கவும் வழி வகுத்துவிட்டதாக நோக்கர்கள் கருதுகின்றனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று காலை வங்கதேச அங்கீகார அறிவிப்பைத் தலைமையமைச்சர் வெளியிட்டபோது, உறுப்பினர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியுடன் அதனை வரவேற்றனர்.'

தலைமையமைச்சர் இந்திராவின் இராசதந்திரத்தையும், அறிவுக் கூர்மையையும் கட்சி வேறுபாடின்றி உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினர்.

எதிர்பார்க்கப்பட்டது போலவே, வங்க தேசத்தை இந்தியா அங்கீகரித்த சிறிது நேரத்திலேயே பாகிஸ்தான், இந்தியாவுடனுன தூதுவரக உறவுகளைத் துண்டித்துக்கொண்டுவிட்டதாகப் பாகிஸ்தான் அறிவித்தது.

பெரும் பொறுப்பும் சிக்கலும்

விடுதலையடைந்துவரும் வங்க தேசத்தைச் சீரமைப்பதுதான் இப்போது வங்க தேச அரசு எதிர்பார்க்கும் மிகப் பெரிய பிரச்சினையாகும்.

வங்க தேசத்தின் பொருளாதாரம் முற்றிலும் சீரழிந்துவிட்டது; முதலில் அங்கு வாழும் ஏழரைக் கோடி மக்களுக்கும் உணவு வழங்கியாக வேண்டும்; இதற்கான பெரும் பொறுப்பு இந்தியாவையே சாரும்.

அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது மற்றொரு சிக்கலாகும்; வங்க தேச அரசிடம் அதற்குப் போதிய அதிகாரிகள் இல்லை; அவர்கள் கேட்டுக்கொண்டால், இந்தியா ஒரு சில அதிகாரிகளைக் கொடுத்துதவும் என்று தெரியவருகிறது.

வழக்கமாக, போர் மூலம் விடுதலையடைந்த பகுதிகளை இராணுவ கவர்னரின் நிர்வாகத்துக்கு உட்படுத்துவதே முறையாகும்.

வங்க தேசத்தைப் பொறுத்த வரையில், விடுதலைப் படைக்கு உதவி செய்யவே இந்திய இராணுவம் சென்றிருப்பதால், பிடிபட்ட இடங்களை வங்க தேசத் தலைவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

அழிவுக்குவழிகோலினர்-- அனைத்தையும் இழக்கின்றனர்

எதிரியின் தளங்கள் தூளாகின்றன

எல்லா முனைகளிலும் இந்திய வீரர்கள் விரைந்து முன்னேறுகின்றனர்

புதுடில்லி, டிச. 7—

பாகிஸ்தானின் எல்லாப் பகுதிகளிலும் இந்திய இராணுவம் மிக் வேகமாக முன்னேறி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

பெரும் அளவில் பாகிஸ்தான் போர் வீரர்கள் அழிக்கப்பட்டதுடன் பலர் உயிருடன் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

நான்கு நாட்களாக நடைபெற்ற போரில் பாகிஸ்தானின் 52 விமானங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன; மற்றும் 89 டாங்கிகள் — 8 கப்பல்கள் -- ஒரு நீர்மூழ்கிக் கப்பல் ஆகியவைகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் இழந்துவிட்ட விமானங்களின் எண்ணிக்கை, அதன் மொத்த விமானப் படை எண்ணிக்கையின் ஐந்தில் ஒரு பகுதியாகும்.

கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தானின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அங்கு அதன் விமானப் படைக்கு மிஞ்சியிருப்பது இரண்டு சாப்ரே ஜெட் விமானங்கள்தான்.

கிழக்கு வங்கத்தில் நமது இராணுவம் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருகிறது; ஏனெனில், அங்கு அதிகச் சேதம் ஏற்பட்டால், அதனுல் வங்காள தேச அரசுக்கே இழப்பு ஏற்படும்.

இறுதிவரையில் போராடும்படி அங்குள்ள இராணுவத்துக்குப் பாகிஸ்தான் உத்தரவிட்டிருக்கிறது; ஆகவே இந்திய இராணுவம், மேலும் இரத்தம் சிந்தாமல் சரணடையும்படி பாகிஸ்தான் துருப்புக்களுக்கு அறிவுரை கூறிவருகிறது; இதற்காக, அச்சடித்த துண்டு அறிக்கைகள் ஏராளமான அளவில் விமானம் மூலம் அவர்களிடை வீசிவருகின்றனர்.

நமது விமானங்கள் தங்குதடையின்றி, கிழக்கு வங்காளத்தில் இப்போது ஆதிக்கம் செலுத்திவருகின்றன.

மேற்குப் பாகிஸ்தான் முழுவதிலும் பல இராணுவத் தளங்கள்மீது இந்தியப் படை விமானங்கள் பெரும் அளவில் குண்டுகள் வீசித் தாக்கின; எதிரியின் தளங்கள்மீது 100 தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன,

மேற்கும் பகுதியில் பாகிஸ்தான் விமானப் படையும் மூர்க்கமாகப் போராடிவருகிறது; பம்பாயில் குண்டுகளைப் போட அவைகள் ஒரு வீண் முயற்சியை நடத்தின.

நேற்று இரவு 7-மணியளவில் பாகிஸ்தான் விமானம் ஒன்று பம்பாய் அருகில் தென்பட்டன; உடனடியாக, விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இயங்கத் துவங்கின; அபாயச் சங்குகள் உடனடியாக ஒலித்தன; விளக்குகள் அணைக்கப்பட்டு நகரமே இருளில் மூழ்கியது.

இரண்டு தடவைகள் இப்படி அபாயச் சங்குகள் ஊதப்பட்டு, சுமார் 60 நிமிடங்களுக்கு நீடித்தன.

நமது தரப்பிலிருந்து விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுட்டதில் 50 பேருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது; கீழிருந்து சுட்ட குண்டுகளின் பிசிறுகள் விழுந்ததன் காரணமாக அவர்கள் காயமடைந்திருக்கின்றனர்.

ஏவி.எம். ஸ்டுடியோ தகராறு

அமைச்சர் என்..விஎன். முன்னிலையில் உடன்பாடு

சென்னை, டிச. 7—

எவி. எம். ஸ்டுடியோ தொழிலாளர் தகராறு குறித்து அமைச்சர் என் வி. நடராசன் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது; தொழிலாளர்கள் இன்று வேலைக்குத் திரும்புகிறார்கள்.

அமைச்சர் முன்னிலையில் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் -- நிர்வாகத்தினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது.

அமைச்சரின் கருத்துக்கு இணங்க, உடனடியாக 50 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கும், மீதியுள்ள தொழிலாளர்களை ஒரு திங்களுக்குள் வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--12--71

திருவான்மியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சிங்காரவேலர் திடலில் -- பவனி மேடை அருகில்; தலைவர்: ம. நடராசன்; பேசுவோர்: தந்தை பெரியார்; தி. சு. இலட்சுமணன் எம்.பி., 'விடுதலை' கி. வீரமணி, மம்மல் நல்லதம்பி, சி. இராமலிங்கம், மற்றும் பலர்.

அனைத்து நாட்டு விமானங்கள்

டில்லி-கல்கத்தாவில் இறங்கக்கூடாது

புதுடில்லி, டிச. 7—

" தற்போதுள்ள நிலைமை காரணமாகப் புதுடில்லியிலும்--கல்கத்தாவிலும் விமானங்கள் இறங்க வேண்டாம் என்று அனைத்து நாட்டு விமான நிறுவனங்கள் அனைத்துக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது "

என்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்துநாட்டு விமானங்கள் பம்பாயிலும் சென்னையிலும் இறங்கக்கூடும்.

அமெரிக்கத் தீர்மானம் இரண்டாம் முறையாகத் தோல்வி

'வீட்டோ' அதிகாரத்தை மீண்டும் இரஷ்யா பயன்படுத்தியது

இந்தியாமீது பாகிஸ்தான் தூதர் பாய்ச்சல் -- இரஷ்யாமீது சீனுவின் குற்றச்சாட்டு

நியூயார்க், டிச. 7—

இந்தியாவில் போர் நிறுத்தத்தையும்--படைகளைத் திரும்பப் பெறுவதையும் வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சோவியத் இரஷ்யா 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்டு தோற்கடித்தது.

சென்ற 24 மணி நேரத்தில் இரண்டாவது தடவையாக இந்தியா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

அமெரிக்கா மற்றும் ஒன்பது நாடுகளுடன் சேர்ந்து சீனு இத்தீர்மானத்தைத் ஆதரித்து வாக்களித்தது; பிரிட்டனும்--பிரான்சும் வாக்கு அளிக்கவில்லை; 'ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்படாத எந்தத் தீர்மானத்திலும் அர்த்தமில்லை' என்பதே அவர்களுடைய நிலையாகும்.

"வங்க தேசப் பிரதிநிதி ஒருவரையும் பாதுகாப்புச் சபைக்கு அழைக்க வேண்டும்" என்று தாங்கள் ஒரு தீர்மானம் அனுப்பியிருப்பதை இரஷ்யப் பிரதிநிதி மாலிக் வற்புறுத்தினுர்; ஆனுல் சீனத் தூதர் இதை எதிர்த்தார்; 'இது ஐ நா. உறுப்பு நாடு ஒன்றைத் துண்டாடும் முயற்சியாகும்--ஐ. நா. சாசனத்திற்கு முரணனதாகும்' என்று அவர் சொன்னுர்.

" வங்க தேசப் பிரதிநிதியை அழைப்பது சபையின் விதிகளை மீறுவதாகும் " என்று பாகிஸ்தான் பிரதிநிதி ஆகா ஷாகி எதிர்த்தார்.

இரஷ்யப் பிரதிநிதி மாலிக் குறுக்கிட்டுப் பேசுகையில், 'வங்க தேசத்தில் என்ன நடக்கிறதென்பதை அவர்களுடைய பிரதிநிதிகளைத் தவிர வேறு யார் சரியான விவரம் கொடுக்க முடியும்' என்று கேட்டார்; 'வங்க தேசத்தின தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் தங்களுடைய எதிர்காலத்தை முடிவு செய்ய முடியும்' என்றும் அவர் கண்டிப்பாகக் கூறினுர்.

" வங்க தேசத்தில் அரசியல் தீர்வு காணவேண்டும் " என்று சோவியத் இரஷ்யா கொண்டு வந்திருந்த தீர்மானமும் 'ஏற்றுக் கொள்ளப்படவில்லை; இரஷ்யாவும் -- போலந்தும் மட்டும்தான் இதை ஆதரித்து வாக்கு அளித்தன; சீனு எதிர்த்து 12 உறுப்பினர்களும் வாக்கு அளிக்கவில்லை.

அமெரிக்காவின் புது முயற்சி

இந்தியா — பாகிஸ்தான் பிரச்னை பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபையில் எந்தத் தீர்மானமும் நிறைவேற்றுவது இயலாமலிருப்பதால், இதை ஐ. நா. பொதுப் பேரவைக்கே கொண்டுவரலாமா என்று அமெரிக்காவும், வேறு சில நாடுகளும் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றன.

சேலம் சிற்றுளிசுப்பிரமணியம் மறைவு

சென்னை, டிச. 6—

சேலத்தின் செயல்வீரரும் — திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தொண்டரும் — சிறந்த பேச்சாளருமான திரு. சிற்றுளி சுப்பிரமணியம், நேற்று காலை சேலத்தில் மாரடைப்பால் இயற்கையெய்தினுர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் கிடைத்தவுடன், கழகத் தலைவர் கலைஞர் அவர்களிடமும் — மற்றும் அமைச்சர்களிடமும் அமைச்சர் இராசாராம் தெரிவித்துவிட்டு, உடனடியாக இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள சேலத்திற்கு விரைந்தார்.

கலைஞர் இரங்கல்

செய்தி கேட்ட கலைஞர் கண் கலங்கி "கலைசாய்ந்தது; என் மனம் குலைந்தது; என் செய்வேன்' என்ற இரங்கற் செய்தியை கண்ணீர் மல்க அமைச்சர் இராசாராமிடம் கூறினுர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கே. செயராமன், மு. பழனிவேலன், கரிவேங்கடம், கோவிந்தசாமி, இடைப்பாடி ஆறுமுகம், வேலப்பன், பொன்னுமலை, சேலம் முத்து எம்.எல்.சி., ஆகியோர் உடனடியாகச் சென்னையை விட்டுப் புறப்பட்டனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தமது ஆழ்ந்த இரங்கலைச் சிற்றுளியின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் அவர்களை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த பரிவையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.